05.08.2021 CC. 44/2007 PW1 Padma

சாட்டசி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கக்பட்டார்

குறுக்கு விசாரணை

1வது எதிரியை ஒரு வருடமாக நான் காதலித்தேன். 1வது எதிரி இந்து மதத்தை சார்ந்தவர். நான் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர். நான் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் என்பதால் எங்களது தகப்பனாருக்கு எங்களது திருமணத்தில் விருப்பமில்லை என்றால் சரிதான். எனது அப்பா வீட்டிற்கும் எனது கணவர் வீட்டிற்கும் 100 மீட்டர் இடைவெளி இருக்கும். எனக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடக்கும் போது 1ம் எதிரியின் வீட்டில் எனக்கு 13 பவுன் தாலிச்செயின் போட்டார்கள். எனக்கு காப்பும் போட்டார்கள். எனது கணவருக்கும் எனக்கும் நாங்கள் சந்தோஷமாக வாழ்ந்ததின் அடிப்படையில் 2 குழந்தைகள் உண்டு என்றால் சரிதான். எனது மாமனார் எனது திருமணத்தின் போது பஞ்சாயத்து அலுவலகத்தில் கிளார்க்காக வேலைப்பார்த்ததர்கள். எனது மாமியார் எனது திருமணத்தின் போது ஆசிரியராக வேலைப் பார்த்தார். எனது மாமனார், மாமியார் இருவரும் வேலைப் பார்த்ததால் எங்கள் வீட்டில் பண புழக்கம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எனக்கு முதல் குழந்தை ஆண் குழந்தை ஆகும். எனது முதல் குழந்தை நாகர்கோவில் கோபாலபிள்ளை மருத்துவமனையில் வைத்து பிறந்தது. எனது முதல் குழந்தை பிறக்கும் போது எனது பெற்றோர் வீட்டில் என்னை பார்க்க வரவில்லை என்றால் சரிதான். எனக்கு 2வது குழந்தை 2001ம் வருடத்தில் பிறந்தது. 2வது குழந்தை பிரசவ செலவையும் எனது மாமனார் வீட்டில் தான் செய்தார்கள். 1998ம் வருடத்தில் இருந்து 2006 வரை எனக்கும் எனது கணவர் வீட்டாருக்கும் பிரச்சினை இருந்து வந்தது. நான் பி.காம் படித்துள்ளேன். எனக்கும் எனது கணவருக்கும் உள்ள சிறுசிறு பிரச்சினைகளுக்காக நான் அனைத்து மகளிர் காவல்நிலையத்திலோ, கருங்கல் காவல்நிலையத்திலோ புகார் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். இந்த விவரத்தை நான் என்னுடைய புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனது கொழுந்தனார் குலசேகரத்தில் உள்ள கல்லூரியில் ஹோமியோபதி படிப்பு படித்துள்ளார். எனது கொழுந்தனார் (4வது எதிரி) காலையில் கல்லூரிக்கு சென்றால் மாலையில் தான் வருவார் என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் உள்ள சிறு சிறு பிரச்சினை காரணமாக கருங்கல் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் எந்த பிரச்சினை இல்லை என்றாலும், எனது சகோதரரின் தூண்டுதலின் பேரில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வீடு எனது கணவர் வீட்டிற்கு அருகில் இருந்த போதும் அவர்கள் என்னை வந்து பார்க்காததற்கு விஷேச காரணம் உண்டா என்றால் எங்கள் திருமணத்தில் அவர்களுக்கு விருப்பமில்லை. புகார்மனு என்னால் எழுதப்பட்டதாகும். (சாட்சி தற்போது தனக்கும் 1வது எதிரிக்கும் 1998லிருந்து 2006 வரை ஏற்பட்ட சிறு சிறு பிரச்சினைகளுக்காக தான் காவல்நிலையம் சென்று புகார் அளித்த விவரத்தை தனது புகார் மனுவில் கூறவில்லை என்று கூறுகிறார்) ஏதேனும் அடித்தல் திருத்தல் இருந்தால் புகார் மனுவில் சுருக்கொப்பம் இட வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியாது. 12.12.2006ம் தேதி அன்று வழக்கு சம்பவம் நடந்த தினத்தன்றே நான் காவல்நிலையத்தில் புகார்

மனு அளித்தேன். அ.சா.ஆ1.ல் 2வது பக்கத்தில் ரூபாய் 50,000 என்பது இடையில் நுழைத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் சாராம்சமும் என்னுடைய கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் எனது திருமணத்தின் போது தேங்காய் கொப்பரை வைத்து தொழில் செய்து வந்தார். எதிரிகள் அனைவரும் சுமார் 6 மாதமாக தொடர்ந்து எப்படியாவது நீ போய் பணம் வாங்கி வரவேண்டும் என்று கேட்டு அடிக்கடி கொடுமைப்படுத்தினார் என்று நான் எனது முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை புகார் மனுவிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அப்படி சொல்லியதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அளித்த புகார் மனுவில் என்னுடைய சகோதரியிடம் எனது கணவர் பணம் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 2005 முதல் 2006 வரை எனக்கும் எனது கணவருக்கும் ஏற்பட்ட பிரச்சினை சம்மந்மதாக நான் காவல்நிலையத்தில் புகார் மனுக்கொடுத்ததை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை. எனக்கு காயம்பட்டவுடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனக்கு காயம் ஏற்பட்ட வுடன் நான் நாட்டு மருந்து எடுத்த விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை. என்றால் சொல்லியுள்ளேன். என்னுடைய தகப்பனார் வீட்டில் படிக்கட்டு உள்ளது. எனது கணவரின் தம்பி சுனிலுக்கு மெடிக்கல் கடை உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரருக்கும் மெடிக்கல் கடை உள்ளது என்றால் சரிதான். நான் எனது வீட்டிற்கு 3வது மகள். நான் 1வது எதிரியுடன் காதல் திருமணம் செய்ததால் எனது வீட்டிற்கும் 1வது எதிரியின் வீட்டிற்கும் விரோதம் உள்ளது என்றால் சரிதான். எனது பிள்ளைகள் வளர்ந்தவுடன் எனது வீட்டாருடன் பேச்சுவார்த்தை உண்டா என்றால் பேச்சு வார்த்தை இல்லை. நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரரின் கடையில் தான் 1வது எதிரி வேலைப் பார்த்தார் என்றால் சரியல்ல. நான் என்னுடைய கணவர் மற்றும் எனது மாமனார் மற்றும் மாமியாருடன் ஒரே குடும்பமாக வசித்து வந்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனக்கு சாப்பாட்டிற்கு எந்த குறையும் கிடையாது என்றால் சரிதான். எனக்கும் 4வது எதிரிக்கும் தனிப்பட்ட எந்த விரோதமும் கிடையாது என்றால் சரிதான். 4வது எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு மரண பயம் ஏற்பட்டதாக நான் புகார் மனுவிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையம் சென்றுவிட்டேன். 12.12.2006ம் தேதி மதியம் 1மணிக்கு நான் காவல்நிலையம் வந்துவிட்டேன். பிறகு நான் நாட்டு மருந்து சிகிட்சைக்காக சென்றேன். நான் அவ்வாறு நாட்டுமருந்து சிசிட்சைக்காக சென்ற விவரத்தை நான் புகார் மனுவிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்தவுடன் எனது அலறல் சத்தத்தைக் கேட்டு எனது சித்தி கமலபாய் பார்த்தார்கள். எங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வசிக்கும் செல்வமணி என்பவரும் சம்பவத்தைப் பார்த்திருப்பார்கள். எனது கணவர் அடித்ததில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. இரத்தம் எனது துணியின் மீது வடிந்தது. இரத்தக்கறை படிந்த துணியை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. 4ம் எதிரியின் திருமணம் 2005ல் நடைபெற்றது. திருமணமானதில் இருந்து தனியாக வசித்து வந்தார். சம்பவம் நடந்த சமயம் 4வது எதிரி தனியாக வாடகை வீட்டில் வசித்து வந்தார். எனது

வீட்டில் எந்த சம்பவம் நடந்தால் கேள்விபட்டு தான் வரமுடியும் என்றால் அடிக்கடி எனது வீட்டிற்கு வருவார். 12.12.2006ம் தேதி நடந்த சமயத்தின் போது 4வது எதிரி இருந்த விவரத்தை நான் புகார் மனுவிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 4வது எதிரி எந்தயிடத்தில் எப்படி வந்து மிரட்டினார் என்று நான் எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பட்ட காயங்களுக்காக சித்த மருத்துவத்தில் 5 நாட்கள் சிகிட்சையில் இருந்தேன். பொதுவாக எலும்பு முறிவு ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு தான் செல்வார்கள் என்றால் சரிதான். 12.12.2006ல் எனக்கு எற்பட்ட காயங்களுக்காக காட்டுகடை ஆசானிடம் மருத்துவ சிகிட்சை பெறும் போது என்னை எக்ஸ்ரே எடுக்க சொன்னார். நான் எக்ஸ்ரே எடுக்கவில்லை. உண்மையிலேயே எனக்கு காயம் ஏற்பட்டிருந்தால் நான் அரசு மருத்துவமனையில் சிகிட்சை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் என்னை கைபாவையாக பயன்படுத்தி நடக்காத சம்பவங்களை நடந்ததாக கூறி எனது மாமனார் குடும்பத்தை அசிங்க படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என்னை புகார் கொடுக்க வைத்து அதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என்றாலும், அடித்து காயப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரியின் குடும்பத்தினர் வசதி படைத்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் என்னை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார், மாமியார் என்னை மகளைப் போல் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனது மாமனாார், மாமியார் என்னை கொடுமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தால் நான் பதிவு திருமணம் செய்து கொண்டு வந்தவுடனேயே எனக்கு நகைகள் எதுவும் செய்துக்கொடுத்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. 4 எதிரிகளும் சேர்ந்து என்னை வரதட்சணை கொடுமை படுத்தியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1ல் 4வது எதிரி என்னை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அளித்த புகார் மனு செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் வீட்டில் படிக்கட்டில் இருந்து கீழே இறங்கும் போது நிலைதடுமாறி கீழே விழந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் சொன்னதின் அடிப்படையில் எனது கணவருக்கும், கொழுந்தனாருக்கும் எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரும் அவரது குடும்பத்தாரும் என்னை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெற்றிருந்தால் நான் முதலிலேயே புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் போலீஸ் விசாரணையில் மற்றும் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

05.08.2021 CC. 44/2007 PW2 ரெத்தினசாமி

சாட்டசி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(சாட்சிக்கு 90 வயது ஆன படியால் சாட்சி திறந்த நீதிமன்றத்தில் உட்கார்ந்து சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டார்)

குறுக்கு விசாரணை

நான் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். 1வது எதிரி எனது மருமகன். 1வது இந்து மதத்தைச் சார்ந்தவர். எனது மகளும் 1வது எதிரியும் எத்தனை வருடம் காதலித்தார்கள் என்று தெரியாது. எனது மகளும் 1வது எதிரியும் காதலித்து திருமணம் செய்ததால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே வருத்தம் இருந்தது. அந்த வருத்தத்தில் தான் எனது மகளுக்கு முதலாவது குழந்தை பிறந்த போது நாங்கள் சென்று பார்க்கவில்லை. 1998லிருந்து 2006வரை நான் தாத்தா என்ற முறையில் அ.சா1ன் குழந்தைகளுக்கு எந்த கடமையும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளுடன் பேச்சுவார்த்தை இல்லாத காரணத்தினால் கடமைகள் எதையும் செய்யவில்லை. எதிரிகளின் வீட்டில் எந்த சம்பவம் நடந்தாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா1ற்கு இரண்டு பிரசவம் யார் பார்த்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா1ஐ எதிரிகள் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. எனது வீடு தெற்கு பார்த்து வாசல் உள்ளது. எனது வீட்டிலிருந்து ரோட்டிற்கு தெற்கு பக்கம் குமார், குமரேசன் ஆகியோர்கள் வீடுகள் உள்ளது. எதிரிகள் வீட்டின் அருகே செல்வமணி, செல்வம் வீடு உள்ளது. எனது மகளுக்கும் எதிரிகளுக்கும் எதிரிகள் வீட்டில் எந்த சம்பவம் நடைபெற்றாலும் செல்வமணி, செல்வம் ஆகியோருக்கு தெரியும் என்றால் செல்வத்திற்கு தெரியும். செல்வமணிக்கு தெரியாது. 1ம் எதிரியின் தகப்பனாரும், தாயாரும் அரசு வேலையில் இருந்தார்கள் என்றால் சரிதான். 1998ல் இருந்து 2006 வரை 1வது எதிரியின் வீட்டில் அ.சா1ன் மாமானரும், மாமியாரும் அரசு வேலை பார்த்ததால் சாப்பாட்டிற்கு குறை இருக்காது என்றால் எனக்கு தெரியாது. 1998லிருந்து 2006வரை அ.சா1 எதிரிகளுடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தாரா இல்லை என்றால் தனிக் குடும்பமாக வசித்து வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. 1998லிருந்து 2006 வரை எதிரிகளின் வீட்டில் என்ன பிரச்சினை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் யார் யார் எனது மகளை என்ன என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகளை எதிரிகள் கொடுமைப்படுத்தினார்கள் என்ற விவரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எனது மகன் ஜெயசேகரன் மிடாலக்காடு ஜங்சனில் மெடிக்கல் ஸ்டோர் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 4ம் எதிரியும் 2006ல் மெடிக்கல் ஸ்டோர் நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது மகனின் மெடிக்கல் ஸ்டோரின் பெயர் பலகை காணவில்லை என்று கருங்கல் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். அப்போது போலீசார் சந்தேகத்தின் பேரில் 1வது எதிரியை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதனால் எனது மகனுக்கும் 1வது எதிரிக்கும் விரோதம்

இருந்ததா என்றால் தெரியவில்லை. எனது வீட்டில் படிக்கட்டுகள் உண்டு. 1998 முதல் 2006 வரை எதிரிகள் எனது மகளை கொடுமைப்படுத்தியது குறித்து இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் புகார் மனுக்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது மகனுக்கும் 1ம் எதிரிக்கும் உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி எனது மகளை கைபாவையாக்கி போலியாக புகார் மனுக் கொடுத்து அந்த புகார் மனுவின் அடிப்படையில் போடப்பட்ட பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் படிக்கட்டில் இருந்து நிலைதடுமாறி கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகளுக்கு ஏற்பட்ட கொடுமைகளை நான் நேரடியாக பார்க்கவில்லை. 4வது எதிரி என்னை எந்தயிடத்தில் எத்தனை மணிக்கு மிரட்டினார் என்ற விவரத்தை நான் புகார் மனுவிலோ, போலீஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 4ம் எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு மரண பயமும் மன உளைச்சலும் ஏற்பட்டதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். உண்மையிலேயே நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் நான் அதனை முதல்விசாரணையிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எனது மகளை வரதட்சணைக் கேட்டு கொடுமைபடுத்தியதாகவும் வரதட்சணை கொடுக்காததால் எதிரிகள் எனது மகளை அடித்துக் காயப்படுத்தியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடக்காத சம்பவங்களை நடந்ததாக எனது மகள் என்னிடம் சொல்லியதாலும் எனது மகன் ஜெயசேகரன் சொல்லிக் கொடுத்ததின் பேரிலும் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி எனது மகள் ஏஞ்சல் ராணியிடம் வரதட்சணையாக பணம் வேண்டும் என்று கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் ஏஞ்சல் ராணியிடம் 1வது எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அப்படி ஒரு நிகழ்வு நடந்திருந்தால் ஆண்டு மாதம், தேதி எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல